**சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை: திரு. P. மகேந்திர வர்மா, B.A., B.L.,**
**சார்பு நீதிபதி, சங்கரன்கோவில்**

**2026-ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 03 ஆம் நாள் புதன் கிழமை**
**(திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீ பராபவ வருடம் வைகாசி திங்கள் 20 ம் நாள்)**

**அசல் வழக்கு எண்.253/2018**

(CNR.No.TNTS07-000652-2018)

* * * * * * * *

வேலு ... வாதி

/எதிர்/

1. வீரமணி
2. தமிழரசி
3. மதியரசி
4. தமிழ்
5. சுடர்வண்ணன்
6. மணிப்பாண்டி
7. மனோகரன் ......பிரதிவாதிகள்

இவ்வழக்கானது கடந்த 11.04.2026 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்தபொழுது, வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள்.எஸ்.கனகராஜா மற்றும் எம்.கடற்கரை அவர்கள் ஆஜராகியும், 1, 2, 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள்.வி.ஏ.தனஅரவிந்த பாலாஜி மற்றும் ஆர்.இராம்குமார் அவர்கள் ஆஜராகியும், 3 ம் பிரதிவாதி தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவம் இல்லாமலும், மேற்படியாரை அழைத்தும் ஆஜராகாமல் இருந்து வந்ததால் மேற்படியார் தோன்றா தரப்பராக தீர்மானிக்கப்பட்டும், இரு தரப்பிலும் முன்னிடப்பட்டிருக்கும் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

இந்த வழக்கானது தபசில் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டதென விளம்புகை செய்தும், அதன் தொடர்பரிகாரமாக தபசில் சொத்தை வாதி அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வழக்குரையின் சுருக்கம்**:-

தபசில் சொத்தானது 1 முதல் 3 பிரதிவாதிகளின் தாயாரும், கருப்பையாத் தேவரின் மனைவியுமான கருப்பாயம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டு அனுபவம் செய்து வந்தார். மேற்படி கருப்பாயம்மாள் தனக்காகவும், தனது மைனர் மகன்களான 1 முதல் 3 பிரதிவாதிகளின் கார்டியன் என்ற முறையிலும் வாதியிடமிருந்து சரியான மறுபயன் பெற்றுக்கொண்டு தபசில் சொத்தினை 13.01.1975 ஆம் தேதிய கிரைய ஆவணத்தின் மூலம் வாதிக்கு கிரையம் எழுதிக்கொடுத்துவிட்டார். அதன்பின் தபசில் சொத்தின் சுவாதீனத்தை வாதி அடைந்து அனுபவம் செய்து வருகிறார். தபசில் சொத்தில் பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. இந்நிலையில் கடந்த 12.06.2018 ஆம் தேதிக்கு முன்பு ஒருமாத காலமாக 1 ஆம் பிரதிவாதி மற்றும் அவரது மனைவியான 4 ஆம் பிரதிவாதி மற்றும் மேற்படியார்களின் வாரிசுகளான 5 முதல் 7 பிரதிவாதிகள் தபசில் சொத்தில் வாதியின் அனுபவத்திற்கு இடையூறு செய்ய முயற்சித்தனர். எனவே தபசில் சொத்தை பொருத்த வருவாய்துறை ஆவணங்களை சரிபார்த்தபோது 13.01.1975 ஆம் தேதிய கிரைய ஆவணத்தில் பழைய நத்தம் சர்வே எண்.682 பா என்று குறிப்பிடுவதற்கு பதிலாக தவறுதலாக பழைய நத்தம் சர்வே எண்.679/2 என தவறுதலாக குறிப்பிடப்பட்ட விபரம் தெரியவந்தது. ஆனால் தபசில் சொத்திற்கான 4 எல்லை விபரம் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது. கருப்பாயம்மாளுக்கு வருவாய்துறை ஆவணங்கள் குறித்து விழிப்புணர்வு இல்லாத காரணத்தினால் தவறுதலாக தவறான சர்வே எண் குறிப்பிடப்பட்டுவிட்டது. இந்நிலையில் தபசில் சொத்திற்கு

வடபுறம் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு இருந்து வந்த சொத்துடன் சேர்த்து தபசில் சொத்திற்கும் தவறுதலாக பட்டா ஏற்பட்டுவிட்டதை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு 1 மற்றும் 4 முதல் 7 பிரதிவாதிகள் வாதியின் அனுபவத்திற்கு இடையூறு செய்ய முயற்சித்து வருகின்றனர். 2, 3 பிரதிவாதிகள் தபசில் சொத்தை பொருத்து அவசியமான கட்சி என்பதால் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும் தபசில் சொத்தில் வாதியின் அனுபவத்தை பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என கூறி பிரதிவாதிகளுக்கு வாதியால் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேற்படி அறிவிப்புக்கு எவ்வித பதில் அறிவிப்பும் அனுப்பாமல் பிரதிவாதிகள் தொடர்ந்து வாதி தபசில் சொத்தை அனுபவம் செய்து வருவதை இடையூறு செய்ய முயற்சித்து வருகிறார்கள். எனவே இந்த வழக்கானது தபசில் சொத்திற்கு வாதியே உரிமையாளர் என்று விளம்புகை செய்யவும், அதன் தொடர்பரிகாரமாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **4 ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 2, 4 முதல் 7 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்:-**

வாதி, வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் தவறானது. தென்மலை கிராமம் பழைய நத்தம் சர்வே எண்.682 பா, புதிய நத்தம் சர்வே எண்.1241/1 1 ஆம் பிரதிவாதியின் தந்தை கருப்பையா தேவருக்கு பாத்தியப்பட்டது. மேற்படி சொத்தினை கருப்பையாத்தேவர் தனது மனைவியான கருப்பாயம்மாளுக்கு ஆவண எண்.1351/1968 என்ற செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார். கருப்பாயம்மாள் 8 ஆண்டுகளுக்கு முன்பு காலமானதற்கு பின்னிட்டு அவரது மகனான 1 ஆம் பிரதிவாதி வாரிசு அடிப்படையில் சொத்தினை அனுபவம் செய்து வருகிறார். மேலும் பழைய புல எண்.682 பா-க்கு புதிய புல எண்.1241/1 இல் 0.0260 ஏர்ஸ் என்ற இடத்திற்கு 1 ஆம் பிரதிவாதி பெயரில் பட்டா எண்.1452 என வருவாய்துறை ஆவணத்தில் பதிவு ஏற்பட்டுள்ளது. மேலும் மேற்படி சொத்தினை பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் இன்றி அனுபவம் செய்து வருகின்றார்கள். வாதி தரப்பில் 1 முதல் 3

பிரதிவாதிகளின் தாயாரான கருப்பாயம்மாள் 13.01.1975 ஆம் தேதிய கிரைய ஆவணத்தின் மூலம் தபசில் சொத்தினை வாதிக்கு கிரையம் எழுதிக் கொடுத்துள்ளதாக கூறியுள்ளது மோசடி கிரைய ஆவணமாகும். மேலும் மேற்படி ஆவணத்தில் 1 ஆம் பிரதிவாதிக்கு வயது 17 என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் உண்மையில் மேற்படி கிரைய ஆவணம் எழுதப்பட்ட சமயத்தில் அவரது வயது 21 ஆகும். மேற்படி சங்கதி கிரைய ஆவணம் மோசடியானது என்பதை காட்டுவதாக உள்ளது. மேலும் கிரைய ஆவணத்தில் பழைய நத்தம் சர்வே எண்.682 பா என குறிப்பிடுவதற்கு பதிலாக 679/2 என குறிப்பிடப்பட்டுள்ளதை பொருத்து திருத்தம் செய்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும் 1 ஆம் பிரதிவாதியின் தாயார் கருப்பாயம்மாள் கடந்த 8 வருடங்களுக்கு முன்பு உயிருடன் இருக்கும் வரையில் ஆவணத்தை பொருத்து திருத்தம் செய்துகொள்ள எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. மேலும் பிரதிவாதிகளிடம் தபசில் சொத்து பற்றி உரிமை எதுவும் கேட்கவும் இல்லை. மேலும் வாதி கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தில் கண்டுள்ள சொத்து விபரமும், தபசில் சொத்தில் காட்டியுள்ள சொத்து விபரமும் வெவ்வேறானது. தபசில் சொத்து பிரதிவாதிகள் குடும்பத்தினரது வீட்டின் பின் வாசலுக்கு பாதையாக அனுபவித்து வரப்படுகிறது. 1 ஆம் பிரதிவாதி மனநிலை சரியில்லாதவர் என்பதால் அவருக்கு நீதிமன்ற காப்பாளர் நியமனம் செய்யாமல் அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மேலும் தபசில் சொத்தில் காட்டியுள்ள புல எண்.682 பா, 679/2 என்ற எண்ணிற்கு உள்ள தொடர்பினை சர்வேயர் வரைபடத்துடனும், வருவாய்துறை ஆவணத்துடனும் வாதி நிரூபிக்கவில்லை. எனவே வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4. இவ்வழக்கில், வாதியின் வழக்குரை மற்றும் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை ஆகியவைகளை பரிசீலனை செய்த இந்நீதிமன்றம், வழக்கின் தீர்வுக்காக கடந்த **26.10.2021** அன்று கீழ்க்கண்ட எழுவினாக்களை வனைந்துள்ளது.

**எழுவினாக்கள்:**

1. தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டு வாதியின் சட்டப்படியான அனுபவத்தில் உள்ளதா?
2. வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?
3. வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?

5. இன்று இவ்வழக்கானது தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் இவ்வழக்கில், வாதிகளின் வழக்குரை மற்றும் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை ஆகியவைகளை பரிசீலனை செய்து இந்நீதிமன்றத்தால் மேற்கண்ட எழுவினாக்கள் கீழ்க்கண்டவாறு திருத்தியமைக்கப்படுகிறது.

**திருத்தியமைக்கப்பட்ட எழுவினாக்கள்:**

1. 13.01.1975 ஆம் தேதிய கிரைய ஆவணத்தில் கண்டுள்ள சொத்தானது பழைய நத்தம் சர்வே எண்.682 பா--க்கு, புதிய நத்தம் சர்வே எண்.1241/1 இல் அமைந்துள்ளதா?
2. வாதி கோரிய விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?
3. வாதி கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?
4. வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?

6. இவ்வழக்கில் வாதி தரப்பில், வழக்கு வாதி வேலு என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ஷையார் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் 5 ம் பிரதிவாதி சுடர்வண்ணன் என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படியார் மூலம் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.5

வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டது.

7. வாதி தரப்பில், வாதி தபசில் சொத்தினை வா.சா.ஆ.1, 31.01.1975 ஆம் தேதிய கிரைய ஆவணத்தின் மூலம் 1 முதல் 3 பிரதிவாதிகளின் தாயாரான கருப்பாயம்மாளிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றும், மேலும் பிரதிவாதிகள் தரப்பில் கருப்பாயம்மாளுக்கு தபசில் சொத்தினை அவரது கணவரான கருப்பையாத்தேவர் பி.வா.சா.ஆ.1 ஆவண எண்.1153/1968 என்ற செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்ததாக கூறியுள்ளதன் மூலம் தபசில் சொத்தில் கருப்பாயம்மாளுக்கு உரிமையுள்ளது என்பது பிரதிவாதிகளால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றும், எனவே கருப்பாயம்மாளுக்கு தபசில் சொத்தை கிரையம் எழுதிக்கொடுக்க உரிமையுள்ளது என்றும், மேலும் கிரைய ஆவணத்தில் தவறுதலாக பழைய நத்தம் சர்வே எண்.682 பா என குறிப்பிடப்படுவதற்கு பதிலாக தவறுதலாக பழைய நத்தம் சர்வே எண்.679/2 என குறிப்பிடப்பட்டுவிட்டது என்றும், அதை பொருத்து பிரதிவாதிகளே மேற்படி கருப்பாயம்மாளுக்கு பழைய நத்தம் சர்வே எண்.679/2 இல் எவ்வித சொத்துக்களும் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், அதன் மூலம் கருப்பாயம்மாள் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தில் தவறுதலாக சர்வ எண்.679/2 என குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை அறிய முடியும் என்றும், மேலும் வா.சா.ஆ.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள மால்கள் பழைய நத்தம் சர்வே எண்.682 பா--வில் அமைந்துள்ளது என்றும், அதற்கு புதிய நத்தம் புல எண்.1241 இல் அமைந்துள்ள ஒரு பகுதி சொத்தே தபசில் சொத்தாகும் என்றும், மேலும் இந்த வழக்கு காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என பிரதிவாதிகள் கட்சி செய்துள்ளதிலிருந்து தபசில் சொத்தை தான் பிரதிவாதிகள், கருப்பாயம்மாள் வாதிக்கு கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார் என்பதை ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்பதை அறியமுடியும் என்றும், மேலும் வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.1 இல் கண்டுள்ள சொத்துக்கள் ஒரே சொத்துக்கள் என்பதை மேற்படி சொத்து விபரங்களில் கண்டுள்ள 4 எல்லைகளின் மூலம் அறியமுடியும் என்றும், எனவே வாதி கோரியபடி

தபசில் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யப்பட்டு அதன் தொடர் பரிகாரமாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்படவேண்டும் என்று வாதம் செய்யப்பட்டுள்ளது.

8. பிரதிவாதிகள் தரப்பில். வாதி தபசில் சொத்தினை வா.சா.ஆ.1, 13.01.1975 ஆம் தேதிய கிரைய ஆவணத்தின் மூலம் கிரையம் பெற்றுள்ள நிலையில் தற்போது 40 ஆண்டுகள் கழித்து ஆவணத்தில் கண்டுள்ள சொத்தின் சர்வே எண் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளதாக கூறியுள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றும், மேலும் மேற்படி சொத்தினை எழுதிக்கொடுத்த கருப்பாயம்மாள் உயிருடன் இருந்த காலத்தில் தவறாக சர்வே எண் குறிப்பிடப்பட்டு கிரையம் எழுதிக்கொடுத்ததை பொருத்து எந்த நடவடிக்கையும் எடுக்காமல் கருப்பாயம்மாள் **2008** ஆம் ஆண்டு இறந்ததற்கு பின்னிட்டு வழக்கு காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வா.சா.ஆ.1, கிரைய ஆவணத்தில் உள்ள சொத்துக்கள் பூர்வீகமாகவும், நன்கொடை ஆவணங்கள் மூலமாகவும் கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ள நிலையில் உண்மையில் பி.வா.சா.1 ஆவணத்தின் மூலம் கருப்பாயம்மாளுக்கு அவரது கணவர் கருப்பையாத்தேவர் சொத்தினை நன்கொடையாக கொடுத்துள்ளார் என்றும், மேலும் மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி சொத்துக்களை கூட்டாக கருப்பாயம்மாளும், கருப்பையாத்தேவரும் அனுபவித்து வருவதாக வாசகம் கண்டுள்ளது என்பதால் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி கருப்பாயம்மாளுக்கு முழு உரிமை வழங்கப்படவில்லை என்றும், மேலும் வா.சா.ஆ.1 ஆவணமானது கருப்பாயம்மாளுக்கு தனது கணவர் வாழ்நாளின் போது எழுதிக்கொடுத்துள்ளதால் அது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றும், மேலும் வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் சர்வே எண்.679/2 என குறிப்படப்பட்டுள்ள நிலையில் தற்போது வாதியால் தபசில் சொத்துக்கள் பழைய நத்தம் சர்வே எண்.682 பா--ல் புதிய நத்தம் சர்வே எண்.1241/1 இல் அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளதற்கு எவ்வித ஆதாரமும் கிடையாது என்றும், உண்மையில் தவறான சர்வே எண் கிரைய ஆவணத்தில் கொடுக்கப்பட்டிருந்தால் வாதியால் சீர்திருத்த ஆவணம் எழுதி வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவேண்டும் என்றும், தபசில் சொத்தில் வாதி அனுபம் செய்து வந்ததை

காட்டக்கூடிய ஆவணம் எதுவும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மேலும் வா.சா.ஆ.1, கிரைய ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்ட முத்திரைத்தாளானது பல்வேறு தேதிகளில் வாங்கப்பட்டுள்ளது என்பதால் அது முத்திரைத்தாள் சட்டம் விதி 6(2)ன் கீழ் தடை செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் வாதி தரப்பில் எதன் அடிப்படையில் வாதிக்கு தவறான சர்வே எண் கிரைய ஆவணத்தில் எழுதப்பட்டிருந்தது என்ற விபரம் தெரியவந்தது பற்றி அறிவிப்பில் எவ்வித சங்கதியும் குறிப்பிடாமல் வழக்குரையை தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றும், மேலும் வாதியால் தபசில் சொத்து பழைய நத்தம் சர்வே எண்.682 பா--க்கு புதிய நத்தம் சர்வே எண்.1241/1 இல் அமைந்துள்ளது என்பது நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டுள்ளது.

9. **<u>திருத்தியமைக்கப்பட்ட எழுவினாக்கள் .1 முதல் 3 க்கான தீர்வு:</u>**

இந்த வழக்கானது, தபசில் சொத்தை பொருத்து வாதி உரிமையாளர் என்று விளம்புகை செய்யவும், அதன் தொடர்பரிகாரமாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9.2. வாதி தரப்பு வழக்கு யாதெனில், தபசில் சொத்து கருப்பாயம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பதும், கருப்பாயம்மாள் தனக்காகவும், தனது மைனர் மகன்களான 1 முதல் 3 பிரதிவாதிகளின் கார்டியன் என்ற நிலைமையிலும் தபசில் சொத்தினை வா.சா.ஆ.1, 13.01.1975 ஆம் தேதிய கிரைய ஆவணத்தின் மூலம் வாதிக்கு கிரையம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்பதும், ஆனால் மேற்படி கிரைய ஆவணத்தின் 4 மால்கள் சரியாக குறிப்பிடப்பட்டு இருந்தாலும் சொத்திற்கான பழைய நத்தம் சர்வே எண். 682 பா என குறிப்பிடப்படுவதற்கு பதிலாக பழைய நத்தம் சர்வே எண்.679/2 என தவறுதலாக குறிப்பிடப்படுவிட்டது என்பதும், தபசில் சொத்தானது பழைய நத்தம் சர்வே எண்.682 பா-வுக்கு புதிய நத்தம் சர்வே எண்.1241/1 இல் அடங்கிய சொத்தாகும் என்பதும் வாதி தரப்பு வழக்காகும்.

9.3. பிரதிவாதிகள் தரப்பு வழக்கு யாதெனில் தென்மலை கிராமம் பழைய நத்தம் சர்வே எண்.682 பா, புதிய சர்வே எண்.1241/1 1 ஆம் பிரதிவாதியின் தந்தை கருப்பையா தேவருக்கு பாத்தியப்பட்டது என்பதும், மேற்படி கருப்பையாத்தேவர் தனது மனைவியான கருப்பாயம்மாளுக்கு ஆவண எண்.1351/1968 என்ற செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார் என்பதும், கருப்பாயம்மாள் 8 ஆண்டுகளுக்கு முன்பு காலமானதற்கு பின்னிட்டு அவரது மகனான 1 ஆம் பிரதிவாதி வாரிசு அடிப்படையில் சொத்தினை அனுபவம் செய்து வருகிறார் என்பதும், மேலும் பழைய புல எண்.682 பா-க்கு புதிய புல எண்.1241/1 இல் 0.0260 ஏர்ஸ் என்ற இடத்திற்கு 1 ஆம் பிரதிவாதி பெயரில் பட்டா எண்.1452 என வருவாய்துறை ஆவணத்தில் பதிவு ஏற்பட்டுள்ளது என்பதும், 1 முதல் 3 பிரதிவாதிகளின் தாயாரான கருப்பாயம்மாள் எழுதிக்கொடுத்த 13.01.1975 ஆம் தேதிய கிரைய ஆவணம் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணமாகும் என்பதும், மேலும் தபசில் சொத்திற்கும் புல எண்.682 பா என்ற எண்ணிற்கு உள்ள தொடர்பினை சர்வேயர் வரைபடத்துடனும், வருவாய்துறை ஆவணத்துடனும் வாதி நிரூபிக்கவில்ல என்பதும், எனவே வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்பதும் ஆகும்.

9.4. தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்று வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதை பொருத்து பரிசீலனை செய்கையில், தபசில் சொத்தானது 1 முதல் 3 பிரதிவாதிகளின் தாயாரான கருப்பாயம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றும், அவர் தனக்காகவும் தனது மகன்களான 1 முதல் 3 பிரதிவாதிகளின் பாதுகாவலர் என்ற முறையிலும் தபசில் சொத்தினை வாதியிடமிருந்து சரியான பிரதிபிரயோஜனம் பெற்றுக்கொண்டு வாதிக்கு கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார் என்பதை காட்டும் வகையில் வா.சா.ஆ.1, 13.01.1975 ஆம் தேதிய கிரைய ஆவணம் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் தபசில் சொத்தானது பூர்வீகமாகவும், நன்கொடை மூலமாகவும் கருப்பாயம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்பதாக கண்டுள்ளது.

9.5. இந்நிலையில் பிரதிவாதிகள் தரப்பில் தபசில் சொத்து ஆதியில் கருப்பாயம்மாளின் கணவரான கருப்பையாத்தேவருக்கு பாத்தியப்பட்டு அவர் வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்தினை உள்ளடக்கிய சொத்துக்களை தனது மனைவியான கருப்பாயம்மாளுக்கு பி.வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார் என்று சொல்லப்பட்டுள்ளது. மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தினை பரிசீலனை செய்கையில், கருப்பாயம்மாளின் கணவரான கருப்பையாத்தேவர் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்தினை அவரது மனைவிக்கு செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார் என்பது தெரியவருகிறது. மேற்படி பி.வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ள சொத்தினை கருப்பாயம்மாளும் அவரது கணவரும் கூட்டாக அனுபவம் செய்து வரவேண்டியது என வாசகம் கண்டுள்ளது.

9.6. இந்நிலையில் பி.வா.சா.ஆ.1 இல் காட்டப்பட்டுள்ள தபசில் சொத்தினை கருப்பாயம்மாள் அவரது கணவர் உயிருடன் இருந்த காலத்திலேயே கிரையம் எழுதி கொடுத்துள்ளார் என்றும், மேலும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி கருப்பாயம்மாளுக்கு முழு உரிமை கிடைக்கப்பெறவில்லை என்றும், எனவே பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலமாக வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதிக் கொடுக்க கருப்பாயம்மாளுக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்று வாதம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் வா.சா.ஆ.1 ஆவணம் எழுதிக்கொடுக்கும்போது கருப்பாயம்மாளின் கணவர் உயிருடன் இருந்ததாக எவ்வித வாதுரையும் (Pleadings) செய்யப்படவில்லை. இதுசம்மந்தமாக எவ்வித சாட்சியமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எனவே பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் கருப்பாயம்மாளுக்கு முழு உரிமை கிடைக்கப்பெறவில்லை என்றும், அதன் அடிப்படையில் வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதிக்கொடுக்க கருப்பாயம்மாளுக்கு முழு உரிமை கிடையாது என்ற சங்கதிகள் ஏற்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.7. உண்மையில் வாதி தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்குவிசாரணை செய்யும்போதும் மேலும் பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்குவிசாரணை செய்யும்போதும் கருப்பாயம்மாள் வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் வாதிக்கு எழுதிக்கொடுத்த சொத்தானது கருப்பாயம்மாளுக்கு பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் நன்கொடையாக கிடைக்கப்பெற்ற சொத்திற்கு கட்டுப்பட்ட ஒரு பகுதி என ஒப்புக்கொண்டே குறுக்குவிசாரணை செய்துள்ளனர் என்பது தெரியவருகிறது. எனவே பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் கருப்பாயம்மாளுக்கு அவரது கணவர் கருப்பையாத்தேவரால் நன்கொடையாக பாத்தியப்படுத்தி கொடுக்கப்பட்ட சொத்தில் ஒரு பகுதியையே வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் வாதிக்கு, கருப்பாயம்மாள் கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார் என்பதால் வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதிக்கொடுக்க கருப்பாயம்மாளுக்கு முழு உரிமையுள்ளது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.8. அடுத்ததாக பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி கருப்பாயம்மாளுக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட சொத்தானது தென்வடல் 27 கெஜம், கிழமேல் 17 கெஜம் அளவுகள் கொண்டுள்ளது என்பதையும், வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி கருப்பாயம்மாளால் வாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட சொத்தானது தென்வடல் 7 1/2 கெஜம், கிழமேல் 8 கெஜம் அளவுகள் கொண்டுள்ளது என்பதையும் அறியமுடிகிறது. எனவே வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள அளவுகளை காட்டிலும், பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள அளவுகள் கூடுதலான அளவுகள் என்பதால் இரண்டு ஆவணத்திலும் 4 எல்லைகள் ஒத்துப்போக வாய்ப்பு இல்லை என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

9.9. அடுத்ததாக வா.சா.ஆ.1 ஆவணம் கடந்த 1975 ஆம் ஆண்டு எழுதிக்கொடுக்கப்பட்டதற்கு பின்னிட்டு தற்போது 40 ஆண்டுகள் காலதாமதமாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதிக்கொடுத்த கருப்பாயம்மாள் இறந்ததற்கு பின்னிட்டு 8 ஆண்டுகள் கழித்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது

என்றும், எனவே வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளதை பொருத்து பரிசீலனை செய்கையில், வாதி தரப்பில், பிரதிவாதிகள் கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் வாதியின் அனுபவத்திற்கு இடையூறு செய்ததாலேயே சொத்தினை வருவாய்துறை ஆவணத்துடன் சரிபார்த்தபோது தவறுதலாக சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ள விபரம் தெரியவந்தது என்றும் சொல்லப்பட்டுள்ளது. அதற்கு மாறாக பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சர்வே எண் தவறாக குறிப்பிடப்பட்ட விபரம் வாதிக்கு முன்னரே தெரியும் என்பதாக எவ்வித சாட்சியமும் முன்னிலைபடுத்தப்படவில்லை என்பதால் வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என பிரதிவாதிகள் தரப்பில் கூறியுள்ளது ஏற்கத்தக்கதாக இல்லை.

9.10. தற்போது இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய முக்கிய பிரச்சனை யாதெனில் வா.சா.ஆ.1 இல் கண்டுள்ள சொத்து விபரத்தில் 4 எல்லைக்குள் அமைந்துள்ள சொத்திற்கு ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட பழைய நத்தம் சர்வே எண்.679/2 என தவறானது என்பதும், அதன் உண்மையான பழைய நத்தம் சர்வே எண்.682 பா--என்பதும், அதற்கு புதிய நத்தம் சர்வே எண்.1241/1 என்பதும் வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதேயாகும். இதுசம்மந்தமாக பரிசீலனை செய்கையில், தபசில் சொத்தின் 4 எல்லைக்குள் கண்டுள்ள சொத்தானது பழைய நத்தம் சர்வே எண்.682 பா---க்கு புதிய நத்தம் சர்வே எண்.1241/1 இல் அமைந்துள்ள சொத்து என்பதை காட்டுவதற்கு வாதி தரப்பில் எவ்வித சாட்சியமும். சான்றாவணங்களும் முன்னிலை படுத்தப்படவில்லை. உண்மையில் தபசில் சொத்து விபரம் மற்றும் வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்து விபரத்தில் கண்டுள்ள நான்கெல்லைக்குள் கட்டுப்பட்ட சொத்தானது பழைய நத்தம் சர்வே எண்.682 பா--க்கு புதிய நத்தம் சர்வே எண்.1241/1 இல் உள்ளது என்பதை நிரூபிக்கும் வகையில் சர்வேயர் உதவியுடன் சொத்துக்களை அளவீடு செய்து ஆவணத்தில் கண்டுள்ள நான்கெல்லையில் கண்டுள்ள சொத்தானது மேற்படி சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்பதை பொருத்து மேற்படி சர்வேயர் மூலமாக சாட்சியம் அளித்து நிரூபித்தால் மட்டுமே தபசில்

சொத்தானது எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என அறிய முடியும். எனவே வாதி கிரையம் பெற்ற வா.சா.ஆ.1, 13.01.1975 ஆம் தேதிய கிரைய ஆவணத்தின் மூலம் கிரையம் பெற்ற சொத்தானது பழைய நத்தம் சர்வே எண்.682 பா--க்கு புதிய நத்தம் சர்வே எண்.1241/1 இல் அமைந்துள்ளது என்பது வாதி தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

9.11. எனவே மேற்கண்ட பரிசீலனையிலிருந்து வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் கண்டுள்ள தபசில் சொத்தானது பழைய நத்தம் சர்வே எண்.682 பா--க்கு புதிய நத்தம் சர்வே எண்.1241/1 இல் அமைந்துள்ளது என்பது நிரூபிக்கப்படவில்லை என தீர்மானித்து திருத்தியமைக்கப்பட்ட எழுவினா.1 க்கு விடையளிக்கப்படுகிறது.

9.12. மேலும் மேற்கண்ட பரிசீலனையிலிருந்து வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் கண்டுள்ள தபசில் சொத்தானது பழைய நத்தம் சர்வே எண்.682 பா--க்கு புதிய நத்தம் சர்வே எண்.1241/1 இல் அமைந்துள்ளது என்பது நிரூபிக்கப்படவில்லை என திருத்தியமைக்கப்பட்ட எழுவினா.1 க்கு தீர்வு கண்டுள்ள நிலையில், தபசில் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டதென விளம்புகை செய்யக்கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என தீர்மானித்து திருத்தியமைக்கப்பட்ட எழுவினா.2 க்கு விடையளிக்கப்படுகிறது.

9.13. மேலும் வாதிக்கு தபசில் சொத்தை பொருத்து விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்பதால் அதன் தொடர் பரிகாரமான தபசில் சொத்தை வாதி அனுபவம் செய்வதை பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என வாதி கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என திருத்தியமைக்கப்பட்ட எழுவினா.3 க்கு விடையளிக்கப்படுகிறது.

10. **திருத்தியமைக்கப்பட்ட எழுவினா .4 க்கான தீர்வு**

வாதிக்கு இவ்வழக்கில் எப்பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என மேற்சொன்ன திருத்தியமைக்கப்பட்ட எழுவினாக்களில் இந்நீதிமன்றம் தெளிவாக முடிவு எடுத்துள்ள நிலையில், செலவுத் தொகை உட்பட வேறு இதர பரிகாரங்கள் எதுவும் வாதிக்கு வழங்கத் தேவையில்லை என இந்நீதிமன்றம் தீர்மானித்து, அவ்வாறே இவ்வெழுவினாவுக்கு தீர்வு காணப்படுகிறது.

11. **இறுதியாக,** இவ்வழக்கினை தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 3-ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MAHINDRAVARMA P
Digitally signed by MAHINDRAVARMA P
Date: 2026.06.03 19:51:24 -0600

சார்பு நீதிபதி,
சங்கரன்கோவில்.

**1. வாதி தரப்பு சாட்சிகள்:**

1. திரு.வேலு ( வாதி)

**2. பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்:**

1. திரு.சுடர்வண்ணன் (5 ஆம் பிரதிவாதி)

**3. வாதி தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 13.01.1975 | ஆம் தேதியில் வாதி தாவா சொத்தினை கிரையம் பெற்றதற்கான கிரைய ஆவணம் அசல் |
| வா.சா.ஆ.2 | 12.06.2018 | ஆம் தேதியில் வாதி 1 மற்றும் 4 முதல் 7 பிரதிவாதிகளுக்கு தனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு ரசீதுடன் கூடியது |
| வா.சா.ஆ.3 | ---- | புல எண்.1241/1 க்குரிய கணினி பட்டா |

**4. பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | ---- | செட்டில்மெண்ட் ஆவண எண்.1351/1968 சார்பதிவாளர் அலுவலக நகல் |
| பி.வா.சா.ஆ.2 | --- | பென்சன் புத்தக நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |
| பி.வா.சா.ஆ.3 | ---- | தென்மலை.1ன் புல எண்.1241ன் வரைபடம் சான்றிட்ட ஒளிநகல் |
| பி.வா.சா.ஆ.4 | ----- | 01.01.1987 முதல் 10.12.2018 வரையுள்ள வில்லங்க சான்று சார்பதிவாளர் நகல் |
| பி.வா.சா.ஆ.5 | ---- | தென்மலை.1ன் புல எண்.1241ல் உட்பிரிவு 1ன் நத்தம் நிலவரித் திட்ட துாய அடங்கல் பதிவேடு உண்மை நகல் |

MAHINDRAVARMA P

Digitally signed by MAHINDRAVARMA P
Date: 2026.06.03 19:51:32 -0600

சார்பு நீதிபதி,

சங்கரன்கோவில்.

**சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**அசல் வழக்கு எண்.253/2018**

**தீர்ப்புரை (அசல்/வரைவு)**

**நாள் 03.06.2026**